04.09.2025

CC No. 136/2024

எ.சா.1 கார்த்திக் த/பெ. பழனியப்பன்.

குறுக்கு விசாரணை

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் பி.டெக் படித்துள்ளேன். நான் TNEB -ல் எப்போது பணியில் சேர்ந்தேன் என்று சொன்னால் 2009 ம் ஆண்டு சேர்ந்தேன். தற்போது இளநிலை பொறியாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2024 ஜனவரி மாதம் நான் என்ன பதவியில் இருந்தேன் என்று சொன்னால் தெழில் நுட்ப உதவியாளராக பணியில் இருந்தேன். எனக்கு வருடத்திற்கு எத்தனை நாட்கள் தற்செயல் விடுப்பு அனுமதி என்றால் 15 நாட்கள் ஆகும். ஈட்டியவிடுப்பு 30 நாட்கள் ஆகும். தற்போது எங்கள் மேலதிகாரி செயற்பொறியாளர், திருப்பத்தூர் ஆவார். கடந்த 2024 ஜனவரி மாதம் நான் தொழில்நுட்ப உதவியாளராக இருந்தபோதும் அவர்தான் எனது மேலதிகாரி. நான் விடுப்பு ஏதேனும் எடுக்கவேண்டும் என்றால் செயற்பொறியாளரிடம் அனுமதி வாங்க வேண்டும் என்று சொன்னால் சரிதான். எழுத்து பூர்வமாகத்தான் அனுமதி வாங்கவேண்டும். கடந்த 2024 ஜனவரி மாதம் எந்த அலுவலத்தில் நான் வேலை செய்தேன் என்றால் திருப்பத்தூரில் வேலை செய்து வந்தேன். அப்போது அந்த அலுவலக்தில் இருந்த மேலதிகாரியின் பெயர் A. மொண்டி. அவர் தற்போது பணி ஓய்வு பெற்று விட்டார். தற்போது உள்ள பொறுப்பு மேலதிகாரியின் பெயர் ஜான் எப் கென்னடி.

2) நான் தாக்கல் செய்த எ.சா.ஆ.1 ஆவணத்தில் எந்த தேதியில் மேற்படி ஆவணம் வழங்கப்பட்டது என்ற தேதி உள்ளதா என்றால் இல்லை. கையொப்பம் செய்த அதிகாரியின் பெயர் இல்லை என்றால் சரிதான். அவரது கையொப்பம் உள்ளது. எ.சா.ஆ.1 ஆவணம் எனது அலுவலகத்தில் யாருடைய கட்டுப்பாட்டில் இருக்கும் என்றால் செயற்பொறியாளரின் கட்டுப்பாட்டில் இருக்கும்.

2024 ஜனவரி மாதத்தில் 26.01.2024 தேதியை தவிர்த்து வேறு எந்த அரசு விடுமுறை நாட்களில் நான் வேலை செல்லவில்லை என்றால் சரிதான். 26.01.2024 அன்று என்னை பணிக்கு வரச்சொல்லி உத்தரவிட்ட அதிகாரி யார் என்றால் செயற்பொறியாளர் ஆவார். அவர் வாய்மொழியாகத்தான் சொன்னார். திருப்பத்தூர் துணை மின் நிலையத்தில் டிரான்ஸ்பார்மர் அதனை சுற்றியுள்ள யார்டு மற்றும் பிறப்பகுதிகளில் மின் இணைப்பிற்கான பராமரிப்பு வேலையையும் புட்கள் அகற்றும் பணியிலும், எனது தலைமையில் 6 பேர் கொண்ட பணியாளர்கள் வேலை பார்க்க செயற்பொறியாளர் உத்தரவிட்ட நிலையில் சிறப்பு பணி செய்தோம். மேற்படி பணி முடிந்த உடன் செயற்பொறியாளர் களப்பணிகளை பார்வையிட்டார். எ.சா.ஆ.1 ஆவணத்தில் நான் பணிக்கு வந்த நேரமோ, பணியை முடித்து சென்ற என்ற நேரமும் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான்.

3) எனக்கு பணி நேரம் எவ்வளவு என்று சொன்னால் நாங்கள் 24 மணி நேரம் பணியில் உள்ளோம். எப்போது கூப்பிட்டாலும் பணிக்கு செல்லவேண்டும். 26.01.2024 ம் தேதிக்கு முன்னர் உள்ள 3 வேலை நாட்களிலும் நான் தற்செயல் விடுப்பு எடுத்திருந்தேன் என்று சொன்னால் சரிதான். அதே மாதத்தில் நான் எத்தனை முறை விடுப்பு எடுத்துள்ளேன் என்றால் தற்செயல் விடுப்பு 4 நாட்கள், ஈட்டிய விடுப்பு 2 நாட்கள் எடுத்திருந்தேன். என்னுடன் பணி செய்யும் மல்லிகா என்பவர் அலுவலக உதவியாளராகவும், பஞ்சவர்ணம் என்பவர் துப்புரவு பணியாளராகவும் உள்ளனர். சுபா என்பவர் தொழில் நுட்ப உதவியாளராக பணிபுரிந்து வந்தார். 26.01.2024 தேதியை தவிர்த்து வேறு எந்த விடுமுறை நாட்களில் வேறு பணியாளர் யாரும் வேலைக்கு வரவில்லை என்று சொன்னால் சரிதான். அன்றை தினம் தேசிய கொடி ஏற்றும் நிகழ்வு முடிந்தவுடன் செயற்பொறியாளரின் வாய்மொழி உத்தரவின் பேரில் ஆண்டு ஆய்வுக்காக அலுவலக வளாகம் முழுவதும் தூய்மை செய்யும் பணி எனது தலைமையில் நடைபெற்றது.

4) ஒப்பந்த பணியாளர்களுக்கு தனியாக வருகை பதிவேடு உள்ளதா என்றால் இல்லை. எ.மா.சா. 1 ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய எனது செயற்பொறியாளரிடம் அனுமதி பெற்றேனா என்றால் வாய்மொழியாக பெற்றேன். எனக்கு எந்த எந்த வங்கிகளில் கணக்கு உள்ளது என்றால் SBI. KVB ஆகிய வங்கிகளில் கணக்கு உள்ளது சம்பள கணக்கு SBI வங்கியில் உள்ளது. என்னிடம் காட்டப்படும் எ.சா.ஆ. 2 ஆவணத்தில் எந்த தேதியில் வங்கி கணக்கு முடிக்கப்பட்டுள்ளது என்ற விபரம் உள்ளதா என்றால் தேதி குறிப்பிடவில்லை. HDFC வங்கி காசோலையை தவிர வேறு வங்கி காசோலைகளும் என்னிடம் உள்ளது என்றால் சரியல்ல. எனது வாக்குமூலத்தில் எனக்கு கடன் வாங்க வேண்டும் என்ற அவசியம் இல்லை என்று சொன்னபோதும் நான் புல்லட்ரான் இந்தியா வங்கியில் தனிநபர் கடன் வாங்கினேன். எப்போது வாங்கினேன் , எவ்வளவு கடன் வாங்கினேன் என்று என்றால் சரியாக நினைவில்லை. மேற்படி கடனை நான் திரும்ப செலுத்திவிட்டேன்.

5) நான் கடன் வாங்கிய விபரத்தை வருமான வரியில் சொல்லியுள்ளேனா என்றால் அப்போது எனக்கு வருமானவரி பிடித்தம் செய்யப்படவில்லை. எ.சா.ஆ. 2 ஆவணத்தை பார்த்து நான் எந்த தேதியில் கடன் வாங்கினேன் என்று சொல்லமுடியுமா என்றால் இல்லை. தனிநபர் கடனிற்கு எந்த தேதியில் எத்தனை காசோலைகள் கொடுத்தேன் என்பதை மேற்படி ஆவணத்தை பார்த்து நான் சொல்ல முடியாது. மேற்படி கடனை எனது காசோலைகளை கொடுத்துதான் கடன் பெற்றேன். ம அவ்வாறு கொடுத்த காசோலைகள் மதிப்பு மறுப்பு செய்யப்பட்டுள்ளதா என்றால் எ.சா.ஆ. 2 ஆவணத்தை பார்த்து சொல்ல முடியாது. நான் மேற்படி கடனிற்காக கொடுத்த காசோலைகளில் 8 காசோலைகள் மதிப்பு மறுப்பு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. என் சகோதரர் கம்ப்யூட்டர் பாகங்கள் விற்பனை செய்யும் தொழில் செய்து வருகிறார். எத்தனை வருமாக தொழில் செய்து வருகிறார் என்றால் நினைவில்லை. அவரின் முகவரி 1191 தந்தை பெரியார் நகர், பர்மா காலனி 8 வது வீதி, காரைக்குடியில் 2016 முதல் தற்போது வரை நாங்கள் அங்குதான் வசித்து வருகிறோம்.

6) என் தாயாரை பராமரிப்பதற்காக  எதற்காக என் சகோதரரிம், காசோலைகள் , கேட்புக் கடனுறுதிசீட்டுகள் மற்றும் வெற்றுதாள்களில் கையொப்பம் மட்டும் செய்தேன் என்றால் என் தாயாரின் பராமரிப்பிற்காக நான் மாற்றுதிறனாளி என்பதால் என்னால் வெளியில் அலையமுடியாத காரணத்திற்காக என் சகோதரரிடன் கொடுத்தேன். மேற்படி காசோலைகள் என் அண்ணன் பெற்ற கடனிற்காக நான் செக்யூரிட்டிக்காக கொடுத்த காசோலைகள் மற்றும் ஆவணங்கள் ஆகும். என் அண்ணனுக்கு எந்த வங்கிகளில் கணக்கு உள்ளது என்று எனக்கு தெரியாது. எனது வாக்குமூலத்தில் மொத்தம் 5 காசோலைகள் கொடுத்ததாகவும், அதில் 2 காசோலைகள் எண் மட்டும் குறிப்பிட்டுள்ளேன் எண் குறிப்பிடப்படாத காசோலைகள் 000013, 000014, 000015 ஆகும். நான் சொல்லிய சாட்சியத்தில் எந்த தேதியில் கசோலையை என் அண்ணனிடம் கொடுத்தேன் என்று சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லவில்லை. 2012 ஜனவரி முதல் வாரத்தில் கொடுத்தேன். 000011 என்ற காசோலையை பயன்படுத்தி என் அண்ணன் யாரிடம் பணம் வாங்கினார் என்றால் அவரது நண்பரிடம் வாங்கினார் யார் என்று எனக்கு தெரியாது. 000012 என்ற காசோலையை பயன்படுத்தி என் அண்ணன் யாரிடம் ரூ.20 ஆயிரம் கடன் வாங்கினார் என்று எனக்கு தெரியாது. மேற்படி 2 கடன்களை கொடுத்த பின்னர் நான் ஏன் என் அண்ணனிடம் மேற்படி காசோலைகளை திரும்ப பெறவில்லை என்றால் நம்பிக்கையின் அடிப்படையில் திரும்ப பெறவில்லை.

7) எனக்கு கடன் வாங்க தேவை இல்லை என்று எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளது பொய் என்றாலும், கடன் வாங்கும் தேவை உள்ளதால்தான் புல்லட்ரான் இந்தியா நிறுவனத்திலும் எனது சகோதரர் மாரியப்பன் மூலமாகவும் கடன் பெற்றேன் என்றால் சரியல்ல, அப்போது கடன் வாங்கும் தேவை இருந்தது. தற்போது இல்லை. என் அண்ணன் மாரியப்பனை விசாரித்தால் அவர் யாரிடம் எப்போது கடன் வாங்கினார் என்ற விபரம் தெரியவரும் என்றால் சரிதான். அவரை

விசாரணை செய்ய தயாராக இருக்கிறேன். HDFC வங்கி கணக்கை ஏன் முடித்தேன் என்றால் அவர்கள் அதிகமாக Charges பிடித்தம் செய்ததால் நான் வங்கி கணக்கை முடித்தேன். என் அண்ணன் வாங்கிய கடனை அடைத்ததாக என்னிடம் சொன்ன பிறகுதான் வங்கி கணக்கை முடித்தேன். என் அண்ணன் வாங்கிய கடனிற்கும், வங்கி கணக்கை முடித்தற்கும் என்ன சம்பந்தம் என்றால் நான் காசோலை கொடுத்திருந்ததால் எனது அண்ணன் மேற்படி கடன்களை செலுத்திவிட்டதாக சொல்லியபின்பு நான் கணக்கை முடித்தேன். மேற்படி கடனை எப்போது முடித்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

8) நான் புகார்தாரருக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு நகலை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஏன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. புகார்தாரரிடம் இருந்து வந்த அறிவிப்பில் இவ்வழக்கு காசோலை எண்கள் குறிப்பிடப்பட்டிருந்து என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பை படித்த பின்னர் என் சகோதரரிடம் அது பற்றி விளக்கம் கேட்டேன். அப்போதுதான் வழக்கு காசோலை கானாமல் போனது பற்றி விபரம் தெரியவந்தது. காசோலைகளை காணாமல் போனது பற்றி காவல் நிலையத்தில் புகார் எதுவும் அளித்தேனா என்றால் இல்லை. வழக்கறிஞர் மூலம் நடவடிக்கை எடுத்தேன். நான் பணி செய்யும் அலுவலகம் எப்போதும் திறந்துதான் இருக்கும் என்றால் சரிதான் செயற்பொறியாளர் அலுவலகம் மட்டும் பூட்டி இருக்கும். புகார்தாரரை யார் என்றே எனக்கு தெரியாது என்றாலும், அவரது சொத்து மதிப்பும் தெரியாது என்றாலும் சரிதான். எனக்கு கடன் கொடுத்தற்கு புகார்தாரர் தகுதியானவரா என்பது பற்றி தகவலை நீதிமன்றத்தில் சமர்பிக்கும்படி கேட்டுக்கொள்கிளேன்.

9) புகார்தாரரை யார் என்றே தெரியாது என்று சொன்ன பின்னர் அவரது சொத்து மதிப்பை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு ரூ.9 லட்சத்து 54 ஆயிரம் கடன் கொடுத்தற்கு என்ன ஆதாரம் உள்ளது என்று எனக்கு தெரியவில்லை. நான் புல்லட்ரான் இந்தியா வங்கியில் வாங்கிய கடனிற்காக மாதத்தவணையாக 4 ஆயிரம் 83

ரூபாய் செலுத்த முடியாத காரணத்தால்தான் எனது 9 வங்கி காசோலைகள் மதிப்பு மறுப்பு செய்யப்பட்டது என்றால் குறிப்பிட்ட காலத்திற்கு பின்புதான் கடனை வசூல் செய்து அதற்கு அபராதம் விதித்து வந்ததால் மேற்படி HDFC வங்கி கணக்கை முடித்துக்கொண்டேன். எனக்கு மாதம் தோறும் 5 ம் தேதிதான் கடனை வசூலிக்கும் தேதி என்றால் சரிதான். 2012 ம் மார்ச் மாதம் என்னுடைய காசோலை மதிப்பு மறுப்பு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் 05.06.2012 என்னுடைய காசோலை மதிப்பு மறுப்பு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் 05.06.2013, 05.07.2013 ஆகிய தேதிகளிலும் எனது காசோலைகள் மதிப்பு மறுப்பு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2012 ல் எனக்கு பணத்தேவை இருந்ததால் நான் கடன் பெற்றேன். தற்போது எனக்கு எந்த பணத்தேவையும் இல்லை.

10) 26.01.2024 அன்று புகார்தாரரிடம் ரூ. 9 லட்சம் கடன் பெற்றுக்கொண்டு அதற்கு ஆதரவாக வழக்கு கடனுறுதிசீட்டு மற்றும் வழக்கு காசோலை அளித்தேன் என்று சொன்னால் சரியல்ல. புகார்தாரரை எனக்கு யார் என்றே தெரியாது. மேற்படி 26.01.2024 அன்று நான் பணியில் இருந்தேன். 26.01.2024 அன்று நான் பணிக்கு சென்று விட்டு மறுநாள் காலையில்தான் நான் வீட்டிற்கு சென்றேன் என்று சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்திருக்கும் எ.சா.ஆ.1 ஆவணத்தை நான் திருத்தம் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.09.04 15:44:32 +0530

விரைவு நீதிபதி, காரைக்குடி.( மு.கூ.பொ)